

SRMU தலைவர் சி.ஏ.ராஜா ஸ்ரீதர் அவர்களின் வாழ்க்கைத் துணைவியார் திருமதி சாந்தி அவர்களின் மறைவையடுத்து, திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (23.06.2026) நேரில் சென்று, அவரது உடலுக்கு மலர்மாலை வைத்து அஞ்சலி செலுத்தி, குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார்.

## சூலூரில் எல்.மூ. மருதுபாண்டியன் படத்திறப்பு

கோவை, ஜூன் 24–

சூலூரில் அமைந்துள்ள கோவை தெற்கு மாவட்ட கழக அலுவலகத்தில் மறைந்த கோவை மாவட்ட குற்றவியல் நீதிமன்ற வழக்கறிஞர் சங்கத் தலைவர், தி.மு.கழக வழக்கறிஞர் அணி நிர்வாகி எல்.மூ.மருதுபாண்டியன் திருவுருவப் படத்திற்கு மாவட்டச் செயலாளர் தளபதி முருகேசன் தலைமையில் மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினர். இதில் சூலூர் தெற்கு ஒன்றிய செயலாளர் மன்னவன், அரசு வழக்கறிஞர்கள் கிருஷ்ணமூர்த்தி, மகேந்திரன், வழக்கறிஞர்கள் சந்திரன், கோவிந்தராஜ், பேரூர் செயலாளர்கள் கௌதமன் (சூலூர்), விஸ்வநாதன் (கண்ணம்பாளையம்), மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர், வழக்கறிஞர் ரமேஷ் பாலன், கிணத்துக்கடவு பேரூராட்சி தலைவர் கதிர்வேல், சூலூர் பேரூராட்சி துணைத்தலைவர் சோலை கணேஷ், ஊராட்சி மன்ற முன்னாள் தலைவர் பார்த்தசாரதி, மாவட்ட தொழிலாளர் அணி துணைத் தலைவர் முருகேஷ், மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர் பூர்ண சந்திரன், கலங்கல் கிளை செயலாளர் சிவக்குமார், பிரபாகரன், வார்டு செயலாளர் பாலசுப்பிரமணியம் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

## சின்னதம்பி பெரியதம்பி



**சின்னதம்பி :** ஏண்ணே; சட்டப் பேரவையில் முதல்வர் விஜய் பதிலுரை எப்படி இருந்தது ?

**பெரியதம்பி :** **ஆமாம் தம்பி; ஏற்கனவே தயார் செய்யப்பட்ட ‘ஸ்கிரிப்ட்’டை மனப்பாடம் செய்துகொண்டு மட்டும்தான் ‘ஷூட்டிங்’கில் நடிக்க முடியும்; பார்த்துப் படிக்க அனுமதி இல்லை.**

**ஆனால் பேரவையில் ‘ஸ்கிரிப்ட்’டைக் கையில் வைத்துக்கொண்டு, பார்த்துப் பேசவும், சினிமா பாணியில், பேசி நடிக்கவும், நக்கல் நையாண்டி செய்யவும் அனுமதி மறுக்கப்படுவது இல்லையே !**

### கல்வி காவிமயம்! மாணவர்களின் உயிரைக் காவு கேட்கும் ‘நீட்’ தேர்வு! தி.மு.க. மாணவரணி சார்பில்

# ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து சென்னையில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்!

### கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ.இராசா எம்.பி. – அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி – மாவட்டச் செயலாளர்கள் – மாணவரணி செயலாளர் ஜெ.வீரமணி உட்பட 5000த்திற்கும் மேற்பட்டோர் கருப்பு உடை அணிந்து முழக்கம்!

**சென்னை, ஜூன் 23 -**

**நீட் தேர்வை ரத்து செய்ய வலியுறுத்தி, சென்னையில் திமுக மாணவரணி சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் ஐந்தாயிரத்திற்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டு கண்டன முழக்கங்களை எழுப்பினர்...**

பாசிச பா.ஜ.க. அரசால் இந்தியா முழுவதும் திணிக்கப்பட்ட ‘நீட்’ தேர்வில் ஒவ்வொரு ஆண்டும் மோசடிகள் முறைகேடுகள் அம்பலப்பட்டு வருகின்றன.

கழக ஆட்சியில் ‘நீட்’ தேர்வில் இருந்து முழு விலக்கு அளிக்க வேண்டும் என்று சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றி ஒன்றிய அரசுக்கு அனுப்பியும் இதுவரை எந்த நடவடிக்கையும் இல்லை. இந்த ஆண்டு நடைபெற்ற ‘நீட்’ தேர்வு இரத்து செய்யப்படுவதாக அறிவித்ததிலிருந்து மறு தேர்வு அச்சத்தால் இந்தியா முழுவதும் 15 மாணவர்கள் தற்கொலை செய்து கொண்டுள்ளனர்.

ஒவ்வொரு ஆண்டும் இந்தியா முழுவதும் மாணவர்கள் தற்கொலை செய்துகொண்டு செத்து மடிகின்றனர். இது பாசிச மோடி அரசால் நிகழ்த்தப்படும் பச்சைப் படுகொலையாகும்.

இத்தகைய நுழைவுத் தேர்வுகளையும் ‘தகுதி’த் தேர்வுகளையும் இரத்து செய்யக் கோரி பாசிச மோடி அரசினை தி.மு.கழகம் தொடர்ந்து நிர்பந்தித்து வருகிறது.

அதேபோல் ஒன்றிய பா.ஜ.க. அரசு மொழிவாரி மாநிலங்களின் உரிமைகளைப் பறிப்பதிலும், தாய்மொழியைத் துறக்கச் செய்து, இந்தி மற்றும் சமஸ்கிருத மொழிகளை மக்களிடையே திணித்து அவர்களை இரண்டாந்தரக் குடிமக்களாக ஆக்கும் சதிச் செயலில் ஈடுபட்டு வருகிறது. 2014-ஆம் ஆண்டு ஒன்றியத்தில் பா.ஜ.க. ஆட்சி அமைந்ததிலிருந்தே, தமிழ்நாட்டில் வடமொழித் திணிப்பை கல்வி நிலையங்களில் பாடத்திட்டம் வழியாகவும் இதர பல்வேறு வகைகளிலும் செய்து வருகிறது.

**கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் கண்டித்துள்ளார்!**

தற்போது ஒன்றிய அரசுப் பள்ளிகளில் (CBSE) 9-ஆம் வகுப்பிலிருந்து 12-ஆம் வகுப்பு வரை சமஸ்கிருத மொழியைக் கற்க வேண்டும் எனும் திட்டத்தைச் செயல்படுத்திட ஒன்றிய மனிதவள மேம்பாட்டுத் துறை ஆணை பிறப்பித்துள்ளது.

இதனைத் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் வன்மையாகக் கண்டித்திருக்கிறார்.

**5000 மாணவர்கள் பங்கேற்றனர்!**

எனவே, ஒன்றிய அரசின் இம்முயற்சிகளை தடுத்திட, கழகத் தலைவரின் அறிவுறுத்தலின்படி பா.ஜ.க. அரசின் ‘நீட்’ தேர்வு மற்றும் இந்தி, சமஸ்கிருத திணிப்பை கண்டிக்கும் வகையிலும், அவற்றை ரத்து செய்ய வலியுறுத்தியும் தலைநகராம் சென்னை மாநகர், சைதையில் “கலைஞர் பொன்விழா வளைவு” அருகில், நேற்று (ஜூன் 23 - செவ்வாய்க்கிழமை) காலை 9.00 மணியளவில், தி.மு.க. மாணவர் அணி சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

மாணவர் அணி செயலாளர் ஜெ.வீரமணி தலைமையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில், திமுக துணை பொதுச் செயலாளர் ஆ.ராசா, மாவட்டச் செயலாளர்கள் மா.சுப்பிரமணியன், சிற்றரசு, மாதவரம் எஸ்.சுதர்சனம், திமுக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, துணை அமைப்பு செயலாளர் தாயகம் கவி உள்ளிட்டோர் கலந்துகொண்டனர். கருப்பு நிற டிஷர்ட் அணிந்து 5 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் போராட்டத்தில் பங்கேற்று கல்வியை காவிமயமாக்கும் ஒன்றிய பாஜக அரசை கண்டித்து முழக்கங்களை எழுப்பினர்..

திமுக மாணவர் அணி துணை செயலாளர்கள் மன்னை சோழராஜன், தமிழரசன், செந்தில் குமார், தமிழ் அமுதரசன், ஆனந்த், கோகுல், பூரண சங்கீதா சின்னமுத்து, ராமகிருஷ்ணன், சுரேஷ் குமார் ஆகியோர் இந்தப் போராட்டத்திற்கு முன்னிலை வகித்தனர். போராட்டத்தின் போது, நீட் தேர்வு அச்சம் காரணமாக தற்கொலை செய்துகொண்ட மாணவர்களின் படங்களுக்கு, மலர்த்தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

### மதுரை மாநகராட்சியின்

## தூய்மைப் பணியாளர்களுக்கு தரமற்ற உணவு விநியோகம்!

### வயிற்றுவலி ஏற்படுத்துவதாக புகார்!

மதுரை, ஜூன் 24-

கட்டணமில்லா உணவு வழங்கும் திட்டத்தின் கீழ், மதுரை மாநகராட்சி தூய்மை பணியாளர்களுக்கு தர மற்ற உணவு வழங்கப்படுவதாக புகார் எழுந்துள்ளது. இந்த உணவால்வயிற்றுக்கு வலி ஏற்படுவதாகக்கூறி, பலரும்உணவை கீழே கொட்டுவதாக தெரிகிறது.

மதுரை மாநகராட்சி தூய்மை பணியாளர்களுக்கு, கட்டணமில்லா உணவு வழங்கும் திட்டம்மாநகராட்சியின் 100 வார்டுகளிலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதன்படி, மதுரையில் மொத்தம் 5,265 பணியாளர்களுக்கு மதிய உணவும், 200 பணியாளர்களுக்கு இரவு உணவும் வழங்கப்பட்டு வருகிறது. இந்த உணவுகள் ஆரப்பாளையம் மேலப்பொன்னகரம் மத்திய சமையல் கூடத்திலும், மாட்டுத்தாவணி மீன் சந்தை வளாக சமையல் கூடத்திலும் தயார் செய்யப்படுகின்றன.

இங்கிருந்து சில்வர் லஞ்ச்பாக்ஸ்களில் வைத்து, மாநகராட்சியின் அனைத்து வார்டுகளுக்கும் நேரடியாக கொண்டு சேர்க்கப்பட்டு, தூய்மை பணியாளர்களுக்கு மதிய உணவை நண்பகல் 12.30 மணி முதல் 1.30 மணிக்குள்ளும், இரவில் 8.30 மணி முதல் 9.30 மணிக்குள்ளும் விநியோகம் செய்யப்படுகிறது. தூய்மைப் பணியாளர்களுக்கான இந்த உணவுத்திட்டம், மதுரையில்கடந்த பிப்ரவரியில் துவக்கப்பட்டபோது, நல்ல முறையில் சுவையான, சத்துமிகுந்ததாக வழங்கப்பட்டது. தற்போது இந்த உணவின் தரம் மிக மோசமாக மாறி இருப்பதாக புகார் எழுந்துள்ளது.

இதுகுறித்து தூய்மைப் பணியாளர்கள் கூறும்போது, ‘கட்டண மில்லா உணவு தானே என்ற கோணத்தில் தற்போது மிக மோசமாக தரமற்ற உணவு தயாரித்து எங்களுக்கு தரப்படுகிறது.

தக்காளி சாதமும்,வெண் பொங்கலும், வெள்ளிக்கிழமைகளில் சாம்பார் சாதமும், இதற்கான உருளைக் கிழங்கு கூட்டு எனவும் மாற்றி மாற்றித் தருகின்றனர். எதுவுமே வாயில் வைக்கும்படி இல்லை. இவற்றை சாப்பிட்டால் வயிற்று வலிதான் மிஞ்சுகிறது.

இதனால் வேலை செய்து களைத்து உணவுக்காக காத்திருக்கும் பலரும், அதனை சாப்பிட முடியாமல் கீழே தான் கொட்டுகிறோம். எனவே இத்திட்டத்தின் அடிப்படையில் எங்களுக்கு நாள் தோறும் தரமான உணவு வழங்கிட வேண்டும். உணவு தயாரிப்பாளர்கள் மற்றும் அதற்கான பொறுப்பாளர்களை மாநகராட்சி அதிகாரிகள் கண்காணித்து அரசு பணம்வீணடிக்கப்படாமல் தரமிக்க, சுவையான உணவுவிநியோகத்தை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்’ என்றனர்

### மூன்று மாத சம்பளம் வழங்கக்கோரி

## மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகம் முற்றுகை!

### களப்பணியாளர்கள் திடீர் போராட்டம்!

மதுரை, ஜூன் 24-

மாற்றுத்திறனாளிகள் நலத் துறை மற்றும் உலக வங்கி இணைந்து செயல்படுத்தும் திட்ட த்தின் கீழ், மதுரை மாவட்டத்தில் வட்டார ஒருங்கிணைப்பாளர்கள், மறுவாழ்வு மேலாளர்கள் மற்றும் களப்பணியாளர் கள் 200க்கும் மேற்பட் டோர் அரசு ஒப்பந்தப் பணியிடங்களில் பணியாற்றி வருகின்றனர்.

இந்த பணியாளர்கள் மாற்றுத்திறனாளிகளைக் கண்டறிந்து, அவர்களின் தேவைகள் மற்றும் விவரங்களைச் சேகரித்தல், பிசியோதெரபி, மன நல ஆலோசனை மற்றும் சிறப்பு கல்வி அளித்தல், மாற்றுத் திறனாளிகளுக்குத் தேவையான உதவித்தொகைகள், உபகரணங்கள் மற்றும் அரசு சலுகைகள் கிடைப்பதை உறுதி செய்வது போன்ற பணிகளில் ஈடுபட்டு வரு கின்றனர்.

இந்நிலையில் மதுரை மாவட்டத்தில் பணிபுரிந்த 200க்கும் மேற்பட்ட தமிழ்நாடு உரிமைகள் திட்ட பணியாளர்களுக்கு தொண்டு நிறுவனத்தினர் கடந்த 3 மாதமாக ஊதி யம் வழங்கவில்லை என கூறப்படுகிறது. இதைய டுத்து பணியாளர்கள் மற்றும் அவர்களுக்கு ஆதரவாக பார்வையற்றோர் மறுவாழ்வு நலச்சங்கத்தினர் திரண்டு மதுரை கலெக்டர் அலுவலக வளாகத்திலுள்ள மாற்றுத் திறனாளிகள் நல அலுவலகத்தை நேற்று முற்றுகையிட்டு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மாற்றுத்திறனாளிகள் முன்பாக அலுவலகம் அமர்ந்து தமிழ்நாடு உரிமைகள் திட்ட பணியாளர்களை மாற்றுத்திறனாளிகள் நலத்துறை அதிகாரிகளின் கீழ் நியமிக்க வேண்டும். தொண்டு நிறுவனத்தினரி குடம் இருந்து 3 மாத ஊதியத்தை பெற்றுதர நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர்கள் கோஷங்களை எழுப்பினர்.

இதற்கிடையே நேற்று குறைதீர் கூட்டத்தில் மனு அளிக்க வந்திருந்த மாற்றுத் திறனாளிகள் ஏராளமானார் அப்பகுதியில் அமர்ந்திருந்தனர்.

இந்த திடீர் முற்றுகை போராட்டத்தால் அவர்கள் பெரும் அவதிக்குள்ளாயினர் என்பது குறிப்பிடத் தக்கது.

### சேலம் மத்திய மாவட்டம்

## காடையாம்பட்டி மத்திய ஒன்றியக் கழகப் பொறுப்பாளர் நியமனம்!

### தலைமைக் கழக அறிவிப்பு

சேலம் மத்திய மாவட்டம், காடையாம்பட்டி மத்திய ஒன்றியக் கழகப் பணிகள் செவ்வனே நடைபெற திரு. என்.பிரகாசம், எம்.ஏ., (110பி, பூசாரிப்பட்டி அஞ்சல், காடையாம்பட்டி, சேலம் 636 305.) அவர்கள் காடையாம்பட்டி மத்திய ஒன்றியக் கழகப் பொறுப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட ஒன்றியக் கழக அமைப்பின் பிற நிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**“அண்ணா அறிவாலயம்”**
சென்னை 18.
நாள் : 23.06.2026.

**துரைமுருகன்**
பொதுச்செயலாளர்,
தி.மு.க.